# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

| | | |
|---|---|---|
| அசல் வழக்கு எண் | : | O. S No. 257/2022 |
| வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் | : | D. W – 4 |
| பெயர் | : | மருதம்மாள் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காளிச்சாமி |
| தொழில் | : | – |
| தாலுகா | : | கோவில்பட்டி |
| வயது | : | 76 |

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## முதல் விசாரணை

1) நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 4 வது சாட்சிய ஆவேன். வாதிக்காக எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –

1. வாதி கண்ணன் இந்நீதிமன்றத்தில் எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் வாரிசு சான்று பற்றி சொல்வதற்காக நடந்த உண்மையை சொல்ல வந்துள்ளேன். வழக்கு பற்றி தெரியாது.
2. வழக்கின் வாதி கண்ணன், வழக்கின் கந்தசாமி, ஜானகி அம்மாள் ஆகியோர்கள் எப்போது தத்தெடுத்தார்கள் என்ற விவரத்தை நீங்கள் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் படிக்கவில்லை என்பதால் நாள் தேதி பற்றிய விவரம் தெரியவில்லை. அதனால் அது பற்றி நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை.
3. தத்தெடுக்கும் சமயம் எனக்கு என்ன வயது என்றால் வயது 20. தற்போது உங்கள் வயது என்ன என்றால் வயது 76. கந்தசாமி, ஜானகியம்மாள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் நாலாட்டின்புதூர் கிராமத்தில். உங்கள் சொந்த ஊர் நாலாட்டின்புதூர் என்றால் ஆம் நான் பிறந்தது அந்த ஊர் தான் என் தம்பியை தத்துக் கொடுக்கும் போதும் அங்கு தான் இருந்தேன்.

4. உங்கள் திருமணத்திற்கு பின்னரும் அங்கு தான் இருந்தீர்களா என்றால் ரொம்பா நாள் அங்கு தான் இருந்தேன் அதன் பின்னர் கோவில்பட்டிக்கு வந்தேன். கந்தசாமி, ஜானகியம்மாள் ஆகியோர் வழக்கின் வாதி கண்ணன் எத்தனை வயதாக இருக்கும் போது தத்து எடுத்தார்கள் என்றால் 6 மாத குழந்தையாக இருக்கும் போது அவர்களுக்கு குழந்தை இல்லை என்பதால் தத்து எடுத்தார்கள்.
5. எங்கு வைத்து தத்து கொடுத்தார்கள் என்றால் நாலாட்டின்புதூர் வீட்டில் வைத்து தத்துக் கொடுத்தார்கள். கிருஷ்ணன் கோவிலில் வைத்து காது குத்தினார்கள். உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் வீட்டில் வைத்து தத்துக் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆம் வீட்டில் வைத்து தத்துக் கொடுத்து ஒரு வயதில் கோவிலில் வைத்து காது குத்தினார்கள்.
6. கோவிலில் வைத்து என்ன முறைப்படி தத்து எடுத்தார்கள் அல்லது சட்டப்படி தத்து எடுத்தார்களா என்றால் வீட்டில் வைத்து மஞ்சள் பால் ஊற்றி தத்து எடுத்தார்கள். நீங்கள் வாதிக்கு உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல நான் நடந்த உண்மையை சொல்கிறேன்.

மறுவிசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
24.08.2026.